மூலம் அந்தப் பகுதி வாய்க்கால்களை அகலப்படுத்தி விரிவுபடுத்தி ஒரு தனித்திட்டத்தை சிறப்புத் திட்டத்தை அரசாங்கம் கொண்டு வருவதற்கு முன்வருமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கால்வாய் கொள்ளளவிற்குத் தக்கபடிதான் நீர் கொடுக்கமுடியும், அதைத் தாண்டிக் கொடுக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவர். ஆனால் இப்போது அவர்கள் சொல்கிற பிரச்சினை வேறு. அதைத் தனியாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால் அது குறித்து அரசாங்கம் ஆய்வு செய்யும்.

திரு. மு. அம்பிகாபதி : தற்போது தனி அதிகாரிகள் மூலம் அந்த வாய்க்கால்களில் அதிகமான தண்ணீர் விடுவதற்கு சிறப்புத் திட்டத்தை, தனிக்கவனத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ள முன் வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அதுதான் அரசின் கவனத்திற்கு இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அரசாங்கம் கவனத்தைச் செலுத்தும்.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, 1970–71, 1971–72 மற்றும் 1972–73 ஆம் ஆண்டுகளுக்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும், சட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய குழுவின் அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஒன்பதாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவு, தமிழ்நாடு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்றி, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஆ. குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு தமிழ்நாடு 1981

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[பிற்பகல் 12-40]

இ. நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்டமுன்வடிவு தமிழ்நாடு 1981 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 56/1981).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 56/1981) ஆய்வுக்கு *எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் என்று கோருகிறேன்.

திரு. என் கிட்டப்பா: தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ்.டி.எஸ். அவர்கள் ஒரு நல்ல தலைப்பின்கீழ் நாமெல்லாம் எதிர்பார்த்த காரியத்தை கொண்டுவருவார் என்று கருதிய நேரத்தில் அதாவது நிலஉச்சவரம்புபற்றி அவர்எடுத்துச் சொல்லு கின்ற தலைப்பின்கீழ், அவர் எடுத்துச் சொல்லுகின்ற காரியங் களைப் பார்க்கும்போது, மிகச் சாதாரணமானவை என்று என் னைப் போன்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தோன்றச் செய்கின்றது. குறிப்பாக, கரும்பு நிலம் அதிலும் மிகவும் குறிப்பாக ஆரூரான் சர்க்கரை ஆலை தொடர்புடைய கரும்பு

---

* 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.